# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2449 - 2025 අගෝස්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.08.07

2449ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்டசம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 78 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 79 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 29ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 15ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர். ( பதில்)

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

77- B 82708 - 403 (2025/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பாணந்துறை மாவட்ட நீதிமன்றம்

இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, இலங்கை வங்கி சதுக்கத்தில் உள்ள இலங்கைவங்கி தலைமை அலுவலகம்

வழக்கு இல. 3197/ அடமானம்
வழக்கு ஆணை இல.: 09/24

*வழக்காளி*

*எதிராக*

இல. 51, மடகிஸ்ஸ ஒழுங்கை, ஹெரேதுடுவை, கெசல்வத்தை, பாணந்துறையிலுள்ள " பெத்தும் கன்ரக்ஷன் " எனும் வியாபாரத்தின் பங்காளிகளான

1. கொம்பஞ்ஞகே நில்மினி கங்கா பொன்சேக்கா
2. ரேந்தகே துஷார பிரியதர்ஷன பெர்னாண்டோ

*- பிரதிவாதி-*

இவ் வழக்கினது 2016 ஆம் ஆண்டு 24ஆந் திகதியிடப்பட்ட தீர்ப்பு வெளியிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் அத் தீர்ப்பு வெளிப்படுத்தலுக்கிணங்க பிரதிவாதியிடம் அறவிட வேண்டிய முதலாக எண்ணூற்று ஐம்பதாயிரம் (ரூ. 850.000) ரூபாயும் 2014.12.05 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய வட்டியாக இருநூற்று எழுபத்தி இரண்டாயிரத்து எண்நூற்று இருபத்து நான்கு ரூபாய் என்பத்தொரு சதம் (ரூ. 272, 824.81) ரூபாயுமாக பதினொரு இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்நூற்று இருபத்து நான்கு ரூபா என்பது சதத்தினையும் (ரூ. 1,122, 824.81) குறித்த எண்நூற்று ஐம்பதாயிரம் (ரூ. 850,000) ரூபாய் மீது 2014.12.06 ஆந் திகதியிலிருந்து தீர்ப்பு வெளியிடப்படும் திகதி வரையில் ஆண்டுக்கு பதினான்கு (14 %) என்ற வீதத்திலான வட்டியையும் முழுத் தொகையையும் செலுத்தி முடிக்கும் வரையில் அத்தீர்ப்பு வெளியீட்டின் மொத்தத் தொகையின் மீதான சட்ட ரீதியான வட்டி மற்றும் வழக்கு கட்டணமான 12, 500 ரூபாயையும் பிரதிவாதியிடமிருந்து வழக்காளி அறவிடலாம் எனத் தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளதால் அத்தீர்பின்படி குறித்த பிரதிவாதியிடம் அறவிட வேண்டிய முதல் சட்ட ரீதியான வட்டி மற்றும் வழக்கு கட்டணத்தை வழக்காளிக்கு அறவிட்டுக் கொடுப்பதன் பொருட்டு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள என்னால் கையகப்படுத்தப்பட்ட ஆதனமானது,

2025, ஓகத்து 28 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு உக்கல்பொட எனும் கிராமத்திலுள்ள கன்கந்தகொடவத்த எஸ்டேட் எனப்படும் காணியின் 3 ஆம் இலக்க காணியில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், இல. 716A உக்கல்கொட மேற்கு கிராம அலுவலர் பிரிவில், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில், களுத்துறை பிரதேச சபை எல்லைகளுள் களுத்துறை தொட்டமுன வடக்கு களுத்துறை பெத்தே உக்கல்பொட கிராமத்தில் அமைந்துள்ள கன்கந்தகொடவத்த எஸ்டேட் எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஈ.டி.கே. பிரேமரத்ன தயாரித்த 1995.04.20 ஆந் திகதியிடப்பட்ட 3190 ஆம் இலக்க வரைபடத்தில் பிரித்து எல்லை நிர்ணயிக்கப்பட்ட 3ஆம் இலக்க காணித்துண்டு- வடக்கு : அதே காணியின் 2 ஆம் இலக்க காணித்துண்டயும் 5 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு : 4 ஆம் மற்றும் 5 ஆம் இலக்க காணித்துண்டுகளையும்; தெற்கு : 59 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் ( 20 அடி அகலம் ) 4 ஆம் இலக்க காணித்துண்டையும் ; மேற்கு : 59 ஆம் இலக்க காணீத்துண்டு மற்றும் 2 ஆம் இலக்க கணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட 3190 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்து தசம் இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.10.2பே.) என்ற விஸ்தீரணத்துடன் அங்குளள மரங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இக்காணி பாணந்துறை காணிப்பதிவகத்தில் பீ 268/ 207 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட 3 ஆம் இலக்க காணித்துண்டு மீளளவை செய்யப்பட்ட 2762 ஆம் இலக்க வரைபடத்தின்படி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது**.

மேற்குறிப்பிட்டவாறு உக்கல்பொட கிராமத்தில் அமைந்துள்ள கன்கந்தகொடவத்த எஸ்டேட் எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் மானக எம்.பீ.ரஞ்சித் ஆனந்த தயாரித்த 2008.11.12 ஆந் திகதியிட்ட 2762 ஆம் இலக்க வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டு 3 , வடக்கு : 3190 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 2 ஆம் இலக்க காணித்துண்டையும் அதே இடத்தில் 5 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு : 3190 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் 4 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 5 ஆம் இலக்க காணித்துண்டையும்; தெற்கு : 20 அடி அகலமான பாதைக்கு ஒதுக்கப்பட்ட இக் காணியின் 59 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 3190 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள

இக்காணியின் 4ஆம் இலக்க காணித்துண்டையும்; மேற்கு : 20 அடி அகலமான பாதைக்கு ஒக்கப்பட்ட அக்காணியின் 59 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 3190 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள இக்காணியின் 2 ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு, 2762 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்து தசம் இரண்டு பேர்ச். (0ஏ.0றூ.10.2பே.) விஸ்தீரணத்துடன் அங்குள்ள மரங்கள், கட்டடங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாம் அட்டவணை (வழியுரிமை)**

மேற்குறிப்பிட்டவாறு உக்கல்பொட கிராமத்தில் அமைந்துள்ள கன்கந்தகொடவத்த எஸ்டேட் என்ற இடத்தில் 3190 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (20 அடி அகலமான பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள) காணித்துண்டு 59, வடக்கு: 107,110,19,60,24 மற்றும் 38 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் கிழக்கு : 30,27,16,13,2-7,61,8,9,20-23,40 மற்றும் 39ஆம் இலக்க காணித்துண்டுகளையும் தெற்கு : 13,12,60,11,10,8,9,20-23,40 மற்றும் 39 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் மேற்கு: 59,26,28,15,14,01,13, 22,60,11,10,19,24 மற்றும் 38 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டு, 3190 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் , இருபது தசம் 5 பேர்ச். (1ஏ.0றூ.20.5பே.) விஸ்தீரணத்துடனான விசாலமான காணியாகும். இக்காணி களுத்துறை காணிப்பதிவகத்தில் பீ 237/264 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு உக்கல்பொட கிராமத்தில் அமைந்துள்ள கன்கந்தகொடவத்த எஸ்டேட் என்ற காணியின் 3190 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (20 அடி அகலமான பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) காணித்துண்டு 56, வடக்கு: 29 மற்றும் 59 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் இக்காணியின் ஒரு பகுதியையும் கிழக்கு : 30,31,37,38,59,39,43,55 மற்றும் 52 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் தெற்கு : வீதியையும் மேற்கு : 38,39,58,51,48,47,57 மற்றும் 44 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டு, 3190 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பத்தெட்டு பேர்ச். (0ஏ.0றூ.38பே.) என்ற விஸ்தீரணத்துடனான விசாலமான காணியாகும். இக்காணி களுத்துறை காணிப்பதிவகத்தில் பீ255/277 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிள்ளது.

டபிள்யூ. என்.பீ.பொன்சேக்கா,
நீதிமன்றப் பதிவாளர் II ஆந் தரம்,
சமாதான நீதிவான்/ பிரதி பிசுக்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
2025, யூன் மாதம் 27.

08- 100

# நானாவித அறிவித்தல்கள்

## கணக்குகளை நிவர்த்தி செய்து கணக்கை முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல்
## தனது சிவில் நீதிமன்ற நியாயாதிக்கத்தை செயற்படுத்துகின்ற கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

வழக்கு இல.: HC (civil ) 39/ 2025/ co
தன்மை:கணக்குகளை நிவர்த்திசெய்து முடிவுறுத்தல்

இங்கே பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 5, பய்ப் வீதி இலக்கம் 7 எனும் இடத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை அமைத்துள்ள Colombo Academy of Language Skills and Dramatic Art (Pvt) Ltd. விடயம் தொடர்பானது.

*- மற்றும்-*

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் X வாசகத்தின் கீழ் மற்றும் அதன் பிரகாரம் நீதிமன்றத்தினால் கணக்குகளை நிவர்த்தி செய்து கணக்கை முடிவுறுத்துவது தொடர்பான விண்ணப்பம் தொடர்பானது.

Colombo Academy of Language Skills and Dramatic Art (Pvt) Ltd.

*- மனுதாரரர்-*

தனது சிவில் நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்படுகின்ற நிறுவனத்தினால் கணக்குகளை நிவர்த்தி செய்து கணக்குகளை முடிவுறுத்தல் தொடர்பான கொழும்பு 5, பைப் வீதி, இலக்கம் 77 எனும் இடத்தில் அமைந்துள்ள Colombo Academy of Language Skills and Dramatic Art (Pvt) Ltd நிறுவனத்தினால் 2025, யூலை மாதம் 29 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனு ஒன்றினை முன் வைத்துள்ளதோடு குறித்த மனு 2025, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னால் விளக்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு தொடர்பான கட்டளை பிறப்பிப்பதற்காக உதவி செய்வதற்கு அல்லது அதற்கு ஆட்சேபிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற குறித்த நிறுவனத்தின் அல்லது கடன் பெறுநருக்கு குறித்த நோக்கத்திற்காக குறித்த விசாரணை செய்கின்ற சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தெரிபட முடியும் எனவும் மனுவின் பிரதி ஒன்று தேவையான நிறுவனம் எவை எனும் அல்லது கடன் பெறுநர் அல்லது பெறுநர்களுக்கு நியமிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மீது கீழே கையொப்பம் இடுகின்றவர்களினால் அதனை வழங்கப்பட வேண்டும் எனவும் இத்தால் அறியத்தருகின்றோம்.

ஒப்பம்,
சச்சின் அரசகுலரத்தின கன்னங்கர,
சட்டத்தரணி,
இல. 11, சாந்த ஜோசப் பிரதேசம்,
கொழும்பு 14.

**குறிப்பு;** குறித்த மனு தொடர்பாக விசாரணையின் போது தெரிபடுவதற்கு எதிர்பார்க்கின்ற அல்லது நபர் அப்படி செய்வதற்குரிய தனது விருப்பத்தினை மேலே பெயர் குறிப்பிடப்படுகின்ற சட்டத்தரணி சச்சின் அரசகுலரத்தின கன்னங்கர அவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவித்து பொறுப்பளிக்க முடியும் அல்லது தபாலில் அனுப்பி வைக்க முடியும். அறிவிக்கின்ற நபரின் பெயர் மற்றும் முகவரி நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியினை அறிவித்தலில் குறிப்பிடப்பட வேண்டியதோடு நபரோ அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களின் (சட்டத்தரணி இருப்பதாயின்) சட்டத்தரணியினால் கையொப்பமிடப்படுவதோடு 2025, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முதல் பொறுப்பளிக்கப்பட வேண்டும் இல்லையாயின் பதிவுத் தபால் மூலம் அனுப்புவதாயின் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் (மேலே பெயர் குறிப்பிடப்படுகின்ற சட்டத்தரணிக்கு) அவர்களுக்கு கிடைக்குமாறு தபாலினூடாக அனுப்பப்பட வேண்டும்.

08- 133

---

**பாராளுமன்றம்**

**பலாங்கொடை ஆனந்தமைத்ரேய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

**வருண லியனகே** ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் இல. 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "**பலாங்கொடை ஆனந்தமைத்ரேய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) பௌத்தநெறி, பௌத்த தத்துவம் மற்றும் புத்த பெருமானின் பௌத்தநெறியோடு தொடர்புள்ள நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதனை பேணிநடத்தல்;
(ஆ) இலங்கையிலும், வெளி நாடுகளிலும் வதியும் பிக்குமார்களின் பிரயோகத்துக்காக இலங்கையினுள் சர்வதேச மொழிப்பாடசாலையொன்றை அமைத்தல்; மற்றும்,
(இ) இலங்கையினுள்ளோ அல்லது வேறு இடத்திலோ கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள், அடிப்படைக் கற்கை போதனைகளை நடாத்துதல் மற்றும் அதற்காக அனுசரணை வழங்கல், பிறவும்.

**வருண லியனகே,**
பாராளுமன்ற உறுப்பினர்.

08- 101